## அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 09.01.2018

காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயிற்சி பெற்ற காரைக்குடியைச் சேர்ந்த பொறியியல் பாடத்தில் பட்டமேற்படிப்பு முடித்த திரு. எஸ்.பிரவின் என்ற மாணவர் அண்மையில் இரயில்வே தேர்வுவாரியம் நடத்திய நிலைய அதிகாரி பதவிக்கும் (Station Master), வங்கிபணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS)நடத்திய புரொபேசனரி ஆபிசர் (Probationary Officer) தேர்வில் பாங்க் ஆப் பரோடாவிற்கும் தேர்வு பெற்றுள்ளார்.



இவர் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக போட்டித் தேர்வுகளை எழுதுவதற்கான சிறப்பு பயிற்சியினை பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக பெற்று வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இரயில்வே தேர்வு வாரியம், வங்கிகள், மற்றும் பணியாளர் தேர்வுவாரியம் ஆகியவற்றிற்கான பல்வேறு பணிகளுக்கான தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு ஆலோசனைகளை ஒவ்வொரு வாரமும் வார இறுதி நாட்களில் அளித்து வந்துள்ளார். இவரும் அழகப்பாபல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும மீன்வளத் துறையின் சார்பாக இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் நடைபெற்று வரும் மீனவ

குடும்பங்களைச் சார்ந்த வேலை நாடுனர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் பயிற்சிகளையும் அளித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இவருக்கு இரயில்வே நிலைய அதிகாரி பணியில் சேர்வதற்கான பணிநியமன ஆணைகிடைக்கப் பெற்றுள்ளது. அவர் தனது பணிநியமன ஆணையுடன் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றார். அப்போது தன்னார்வ பயிலும் வட்டத்தின் இயக்குநர் திரு.சுரேஷ்குமார் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர் பேரா. எஸ்.சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

பதிவாளர்<br>
பேரா.ஹா. குருமல்லேஷ் பிரபு